மாலை மணி

திராவிடர் தமிழ்த் தினசரி ★ ஆசிரியர்: கே. ஜி. இராதாமணாளன்

Regd. No. 5458
Phone: 4502
காலைப் பதிப்பு
விலை அரை அணா

மாலை 4 | சென்னை 18-7-54 | மணி 28

தி. மு. கழகம் ஓர் மகத்தான இயக்கம்!

அதிகார மாற்றமே காங்கிரஸ் ஆட்சி!

சமுதாயம், அரசியல், பொருளாதார விடுதலை வேண்டும்!

திராவிடநாட்டுப் பிரிவினையே நமது இலட்சியம்!

சூரக்குண்டு கூட்டத்தில் சம்பத் பேச்சு

வெள்ளையன் காலத்தில் தென்னாட்டார்கையில் பூட்டப்பட்டிருந்த விலங்கு இன்னும் அப்படியேதான் இருக்கின்றது அன்று விலங்கைப் பூட்டிச் சாவியை வெள்ளையன் வைத்திருந்தான். இன்று வெள்ளையன் வைத்திருந்த அத்தச்சாவியை வடநாட்டான் வைத்திருக்கிறான்.

விலங்கின் சாவியை வைத்திருக்கும் ஆள்தான்—எஜமானன்தான் மாறியிருக்கிறானே தவிர விலங்கு என்னவோ, அப்படியேதான் இருக்கிறது,

சூரக்குண்டு, ஜூலை 17—

சூரக்குண்டு மடிர்தை திடலில் ஜூலை 11-ந் தேதி மாலை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாக் கூட்டத்திற்கு தோழர் வேல்சாமி தலைமை வகித்தார். தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கூட்டத்தில் பேசினார்.

ஊரில் வீடுதோறும் கூட்டம் நடத்துவதற்காக அரிசி கொடுத்துதவினர். மொத்தம் கிடைத்த அரிசியை வசூலித்தே கூட்டம் நடத்தும் செலவை ஈடு செய்தார்கள் உதவிய மக்களுக்குத் தலைவர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். அவர் மேலும் பேசுகையில் தி. மு. கவின் இலட்சியங்களை விளக்கி திராவிட நாட்டுப் பிரிவினையை விரைவில் ஏற்படுத்த ஊர் மக்கள் தி. மு. கழகத்தில் சேர்ந்து உழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசியதின் சுருக்கம்

அன்புள்ள தலைவர் அவர்களே தோழர்களே!

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று ஓர் மகத்தான விடுதலை இயக்கமாக விளங்கி வருகிறது. திராவிட நாடு திராவிடருக்கே என்ற மாபெரும் இலட்சியத்தை முன் வைத்து அதற்காகப் படாத பாடெல்லாம் பட்டு வருகின்றது.

சமுதாயம், அரசியல், பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகளிலும் தென்னாடு—தமிழ் நாடு திராவிட நாடு அடிமை நாடாகத்தான் இருக்கிறது. அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் கூறுகிறார்கள், பாரத பூமி சுதந்திரம் அடைந்து விட்டது சுதந்திரம் பெற்ற இந்த ஏழு ஆண்டுகளில் பல காரியங்களை வெற்றிகரமாகச் செய்து பல துறைகளிலும் முன்னேறி யிருக்கிறோம் என்று. எந்தக் காரியங்களில் நமது நாடு வெற்றி பெற்று முன்னேறி யுள்ளது. வருடாவருடம் பள்ளிப் பிள்ளைகளுக்கு ஒருநாள் மிட்டாய் வழங்கி இதே நாளில் தான் நாம சுதந்திரம் பெற்றோம் என்று ஞாபக மூட்டுவதில்தான் வெற்றி பெற்றுள்ளனர். இந்த சர்க்காரும் காங்கிரஸ்காரர்களும் வேறு எந்த நல்ல காரியத்தைச் செய்து வெற்றி கண்டுள்ளனர், முன்னேறி யுள்ளனர் என்று கேட்கிறேன்.

காங்கிரஸ்காரர்கள் நாம் முழு சுதந்திரம் அடைந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகள் வேறுவிதமாகக் கூறுகிறார்கள். அவர்கள் இந்தநாடு அரசியல் சமுதாயம் ஆகிய இரண்டு துறைகளில் விடுதலைபெற்று விட்டது. இன்னும் பொருளாதாரத் துறையில்தான் விடுதலை காண வேண்டும் என்கிறார்கள்.

பெரும் முதலாளித்துவமும் பெரும் நிலப்பிரபுத்துவமும் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும். அதுதான் தேவை என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள்! எதைக்கொண்டு அழிக்கப்போகிறார்கள். எப்படி ஒழிக்கப்போகிறார்கள்?

அரசியல் அதிகாரம் இன்று எங்கே அத்துமீறிக் குவிந்து கிடக்கிறது? கொள்ளைப்பணம் குவித்துத்தரும் பெரும்வரி விதிக்கும் பொறுப்பும், கோடிக் கணக்கான பணங்களை அதன் மூலம் பெறும் வாய்ப்பும்வசதியும் யாருக்குஉண்டு! எல்லாம் வடநாட்டு மத்ய சர்க்காரிடந்தானே அமோக அதிகாரமும் பணவசதியும் குவிந்து கிடக்கிறது. இந்த நாட்டுச் சர்க்காரால் என்ன செய்து விடமுடியும். இதற்கு என்ன அதிகாரம்இருக்கின்றது. டில்லியைக் கேட்காமல் ஏதும் இதனால்செய்யமுடியாத அரசாங்கம், இந்த சென்னை அரசாங்கம்.

இன்று உண்மையிலேயே சுதந்திரம் பெற்றவர்கள்யார் என்றால் வடநாட்டார்கள் தான். அவர்கள்தான் வெள்ளையன் போனபின்னர் தென்னாட்டைக் கொள்ளையிடும் ஏகபோக அதிகாரத்தைபெற்று தென்னாட்டை

(2ம் பக்கம் பார்க்க)

திருப்பாப்புலியூரில் தீக்கிணறு!

ஆராய்ச்சி நடைபெறுகிறது

கடலூர், ஜூலை. 16—

திருப்பாப்புலியூர் மாத்தவேலி கிராமத்தில், நீர்ப்பாசனத்துக்காக குழாய் கிணறு வெட்டிய போது, 65 அடி ஆழம் சென்றும் தண்ணீர் வராததால் முயற்சி கைவிடப்பட்டது. அவ்வழியே சென்ற சிலர் தண்ணீர் வருகிறதா என்று பார்த்தபடி பீடி பற்றவைக்க, தீக்குச்சியைக் கிழிக்க குழாயின் வாயில் தீப்பிடித்து, மூன்றடி உயரம் எரிய ஆரம்பித்து விட்டதாம். தீட்சணைகளும் படையினரின் முயற்சியும் தோல்வி யடைந்ததாம். குழாயின் வாய் கோணியால் மூடப்பட்டிருக்கிறதாம். அந்த இடத்தில் கந்தகமோ, எண்ணெயோ இருக்க வேண்டும் என்று ஊகிக்கப் படுகிறது. இது சம்பந்தமாக பரிசிலனை செய்ய நில ஆராய்ச்சி இலாகா அதிகாரி ஒருவரை, சென்னை அரசாங்கம் அங்கு அனுப்பி இருக்கிறது.

காணமற்போன தொண்டர்கள் மீண்டனர்

பிரஞ்சுபோலீஸ் அக்கிரமம்

புதுச்சேரி, ஜூலை, 17—

கடந்த பதினான்காம் தேதி பிரஞ்சு போலீசாரால் அடித்து கைது செய்யப்பட்ட 12 புதுவைத் தொண்டர்கள் நேற்றுவரை காணமற்போயிருந்தனர். அவர்கள் நேற்று பிற்பகல் புதுவை எல்லைக்கு எட்டுமைல் தூரத்தில் உள்ள கென்னல் என்ற பகுதியிலுள்ள தென்னல் என்றஇடத்தில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

பிரெஞ்சு போலீசார் தொண்டர்களை 14 ந்தேதிஇரவு முழுதும் உணவின்றியே வைத்து, அடித்து, அந்த இடத்திற் கொண்டுவிட்டுப் போய்விட்டார்களாம்.

இந்திய அகதிகள், காயம் பட்ட தொண்டர்களைக் கவனித்து உணவு முதலியன கொடுத்து ஆதரித்தனராம்.

கொலைக்கைதியின் கருணை

கண்களைக் கொடையாகத் தந்தான்!

கடேப்டவுன். ஜூலை. 17—

உடன் இருந்த ஒரு கைதியைக் கொலை செய்த குற்றத்திற்காக பிரிடோரியா மத்திய சிறையில் இருந்த பெர்னாட் என்ற கைதி தூக்கிலிடப்பட்டான்,

அக்கைதி தூக்கிலிடப்படுவதற்கு முன்னதாகதன் இரண்டு கண்களையும் கொடையாகத் தர ஒப்புக் கொண்டான்.

தூக்கிலிடப்பட்ட சிலநிமிடங்களில் அவனது இரு கண்களையும் பெயர்த்து கண்பார்வையிழந்த நோயாளி ஒருவர் கண்களில் பொருத்தியிருக்கிறார்கள், குருடாகியிருந்த அந்த நோயாளிக்குக் கண் பார்வை வந்துவிட்டது,

மாலைமணி

சென்னை 18—7—54

அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்!

வட இந்தியாவிலிருக்கும் சந்திரநாகூரைக் காலி செய்து விட்ட பிரெஞ்சு ஏகாதிபத்தியம், திராவிடத்தைவிட்டு வெளியேற முடியாது என்று சண்டித்தனம் செய்ததோடு, சுதந்திர தாகம் கொண்ட மக்களை அடக்கியொடுக்கும் ஆணவப்போக்கை மேற்கொண்டது. அன்னிய ஆட்சியில் இனி வாழமாட்டோம் என்ற முழக்கத்தோடு, பிரெஞ்சிந்திய மக்கள் போராட்டக் கொடியை உயர்த்திப் பிடித்தனர்.

திமிர் பிடித்த ஏகாதிபத்தியம், சிறைக் காட்டியும், தடியைத் தூக்கியும், துப்பாக்கியை நீட்டியும் விடுதலை வீரர்களை அஞ்சி அடங்கும்படிச் செய்துவிடலாம் என்று கனவு கண்டது. நாளுக்கு நாள் மக்களின் கிளர்ச்சி வலுத்துக்கொண்டே செல்வதை அறிந்ததும், கப்பல் கப்பலாக யுத்தத்தளவாடங்களையும் சிப்பாய்களையும் இறக்குமதி செய்து விட்டு, சும்மா விட்டேனு பார் என்று சுருதியை உயர்த்திப் பேசியது!

இரத்தம் சொட்டச் சொட்ட தெருவிலே நாய்களைப் போலத் தொண்டர்கள் இழுத்துச் செல்லப்பட்டனர்! சிறையிலே தள்ளி, அன்ன ஆகாரமின்றி அடித்து நொறுக்கிச் சித்திரவதை செய்யப் பட்டனர்! சாட்டையால் அடிக்கப்பட்டனர்! சவம் போல் சாலைகளில் வீசியெறியப்பட்டனர்! எனினும் அன்னியரை விரட்டியடிகக வேண்டும்என்ற ஆர்வமும், விடுதலைபெற வேண்டும் என்ற வேட்கையும், அந்தச் சிங்கத் திராவிடரின் சித்தத்தை விட்டு அகல வில்லை! "போர்! போர்! கடைசி பிரெஞ்சுக்காரனின் கால், இந்த மண்ணின் மீது நிற்கும் வரை போர்!" என்ற கொக்கரிப்போடு, கொடுங்கோலரை எதிர்த்து நின்றனர்! "சுகம் இழந்தோமா—கவலையில்லை! சொத்து பறி கொடுத்தோமா—பரவாயில்லை! சுதந்திர ஜோதியைக் காணச் சுடுகாட்டில் நம் பிணம் வேகும் நிலை வருமா—பொருட்படுத்த மாட்டோம், மாளுக்ப் பூரிப்பே அடைவோம்! என்ற சித்த உறுதியோடு, சிறு பகுதியினரைக் களத்திலே சந்தித்தனர்!

இந்திய அரசாங்கம் பிரெஞ்சிந்திய மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்காவிட்டாலும், ஆறுதலாக ஒரு சொல் கூடச் சொல்லவில்லை! சமாதான முறையிலே பேச்சு வார்த்தை நடத்துகிறோம் என்று—யார் வீடோ பற்றியெரிந்தால்—யார் மக்களோ செத்து மடிந்தால்—நமக்கென்ன என்ற போக்கிலே கேளாக் காதினராய் இருந்து வந்தது! இந்தத் திராவிட மக்களை உயிரோடு புதைத்தால கூடக் கேட்க ஆள் கிடையாது என்ற சூட்சுமத்தைப் புரிந்து கொண்ட பிரெஞ்சு, போர்க்கருவிகளையும் போர்வீரர்களையும் காற்று வேகத்திலே அனுப்பி வைத்தது.

பிரெஞ்சின் பலத்தையோ, அதற்குப் பக்கபலமாக நிற்கும் அமெரிக்காவின் பணத்தோட்டத்தையோ, இந்திய அரசாங்கத்தின் அலட்சியத்தையோ ஒரு துளியும் பொருட் படுத்தாமல் அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழியை நினைவு படுததிக்கொண்டு, மக்கள் அயராமல் தளராமல் போராடி வந்தனர்!

சுத்த வீரர்களின் புலிப்பாய்ச்சலைச் சோற்றுப் பட்டாளத்தினுல் தாங்க முடியுமா—ஓட்டமெடுத்தது! தெருத் தெருவாக, ஊர் ஊராக மீட்கப்பட்டன! விடுவிக்கப்பட்ட பகுதிகளிலே, விண் உயர விடுதலைக்கொடி பறக்க விடப்பட்டது!

வயிற்றுப் பிழைப்பிற்கே வகை தெரியாத வதையும் காய்ந்த உடல்கள்—தோல்மூடிய எலும்புக்கூடுகள்—இரத்த வெறி பிடித்த ஒரு சாம்ராஜ்யத்தைத் தாக்கித் தகர்த்தது என்றால், வேரோடு வெட்டி வீழ்த்தியது என்றால், திராவிடர் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய மகத்தான போர் அன்றோ இது?

மேற்கு கடற்கரையில் உள்ள மாகி பகுதியில், மமதை கொண்ட ஏகாதிபத்தியத்தை மண்ணிலே சாய்த்துவிட்டது, மக்கள் சக்தி! இப்பொழுது பிரெஞ்சு ஏகாதிபத்தியம், மக்கள் தலைவரிடம் அதிகாரத்தை மாற்றும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டது—இனி தன் ஆட்சியும் செல்லாதென்பதை நன்கு தெரிந்துகொண்டு!

போராட்டத்தின் மூலம் ஏகாதிபத்தியத்தைப் பணியவைத்த மாகி மக்களைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்! இனி விழிப் படைந்த புதுவை மக்களுக்கும் விடுதலை விரைவில் கிடைக்கும்! ஆமாம், அந்த நம்பிக்கைத் தீபத்தை நமக்களித்துவிட்டது மாகி!

தி. மு. கழகம் ஓர்.....

1ம் பக்கத் தொடர்ச்சி

சீரழித்துவருகின்றனர் இந்நிலையாருக்குஉண்மையானசுதந்திரம் வந்திருக்கிறது?

வெள்ளையன் காலத்தில் தென்னாட்டவர் கையில் பூட்டப்பட்டிருந்த விலங்கு இன்னும் அப்படியேதான் இருக்கின்றது அன்று விளங்கைப் பூட்டிச் சாவியை வெள்ளையன் வைத்திருந்தான். இன்று வெள்ளையன் வைத்திருந்த அந்தச்சாவியை வடநாட்டான் வைத்திருக்கிறான்.

விலங்கின் சாவியை வைத்திருக்கும் ஆள் தான் எஜமானன் தான் மாறியிருக்கிறானே தவிர. விலங்குஎன்னவோ, அப்படியே தான் இருக்கிறது.

இன்று எந்த தொழிற்சாலையை இங்கு ஆரம்பிக்க வேண்டுமானாலும் மத்திய அரசாங்கத்திடம் — வடநாட்டிடம் கையேந்தித்தான் செல்லவேண்டும். சுங்கவரி, வருமானவரி, முதலியவைகளைப் பெறுவதும் வடநாடுதான். இப்படிப்பெறும் பணத்தைக்கொண்டுஐந்தாண்டு திட்டம் என்று ஒரு திட்டத்தை வகுத்து நடத்துகிறார்கள்,

இந்த ஐந்தாண்டு திட்டத்திற்காகப் பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது, இதற்காக செலவிடப்படும் பணத்தில் 100க்கு 99 ரூபாய் வடநாட்டின் நலனுக்குத்தான் செலவழிக்கப் படுகிறது. ஒரே ஒரு பகுதிதான் தென்னாட்டுத் திட்டங்களுக்காகச் செலவாகிறது. அதாவது ஒரு ரூபாயில் பதினைந்தேமுக்காலணா வடநாட்டினும். ஒரே ஒரு காலணாமட்டும் தென்னாட்டிலும் செலவழிக்கப்படுகிறது இது என்ன நியாயம்?

வரி, வரி என்று தென்னாட்டவரிடம் பலகோடிக்கணக்காகப் பணம்பெற்று அதன்மூலம் வடநாடு கொழுக்கின்றது. வரி கொடுத்து தென்னாடு வளமற்றுத்தேய்கிறது. இத்தகைய ஓர வஞ்சனையை தடுக்கவேண்டும்.

திராவிடநாடு தனியாகப் பிரிந்து, தனியாட்சி நடத்தினால்தான் இங்கு வாங்கப்படும் வரிப்பணம் முழுவதும் இங்கேயே தங்க முடியும் அதன் மூலம் திராவிடநாடு செழிக்க நமக்குத் தேவையான நல்ல காரியங்களை நமக்கு நாமே செய்து கொள்ள முடியும்.

திராவிடநாடு பிரிக்கப்பட வேண்டும் எள்பதற்காக தி மு க பாடுபட்டு வருகிறது திராவிடரின்நலனுக்காகப்பலபோராட்டங்களையும் நடத்தி வருகிறது. மேலும் பல போராட்டங்களை நடத்த இருக்கிறது. அதில் கலந்து பணியாற்ற மக்கள் தயாராக வேண்டும்.

தி. மு. க. நகரங்களிலிருந்து நாளுக்குநாள் கிராமப் பகுதிகளிலும் நல்லபடி பரவி மக்களிடையே செல்வாக்குப் பெற்று வளர்ச்சி யடைந்து வருவதைக் கண்டு பொறாமைப்படும் சிலர், இவர்கள் கடவுள் இல்லைஎன்று கூறுபவர்கள் நாத்திகர்கள் என மக்களிடம் தவறான பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

நாங்கள் கடவுள் இல்லை என்றோ வேண்டாம் என்றோ கூறவில்லை. ஆனால் நாட்டில் கடவுள் பெயரால் நடக்கும் அநீதிகளையும் அக்கிரமங்களையும் கண்டிக்கிறோம். ஆபாசச் சடங்குகளையும் தேவையற்ற திருவிழாக்களையும் கொண்டாட என்று அறிவுறுத்துகிறோம். கடவுளின் பெயரால் உழைக்காமல் ஊராரை ஏய்த்து பிறர் உழைப்பில் சிலர் உண்டு கொழுப்பது கூடாது என்று சொல்கிறோம். கடவுளைக் காட்டி மக்களைச் சுரண்டும் எத்தர்களைக் கண்டுபிடித்து மக்கள் மத்தியில் நிறுத்துகிறோம். இது எப்படி நாத்திகமாகும்?

அண்மையில் வடநாட்டில் கும்பமேளா என்று ஓர்நிர்வாண விழா நடந்தது. அதில் மிதிபட்டும் இடிபட்டும் நூற்றுக்கணக்கில் மக்கள் மாண்டனர் என்பது பற்றிப் பத்திரிகைளில் படித்திருப்பீர்கள். கடவுள் பெயரால் இப்படிப்பட்ட அநாகரிகங்கள் நடப்பது கூடாது என்பது கடவுள் இல்லை என்று சொல்வதாகுமா?

கடந்த ஆண்டு ஜூலை பதினைந்தில் திராவிடர் மும்முனைகளில் போராடி வெற்றி கண்டனர், வரப்போகும் மகத்தான திராவிட இன விடுதலைப் போராட்டங்களுக்கு அது ஒரு ஒத்திகைதான் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இன்று மக்கள் சமுதாயம் அறிவுத் துறையிலே பின்தங்கிக் கிடக்கிறது. மதம், சாஸ்திரம், நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடக்கின்றது, மக்களை அறிவுத் துறைக்குப் பத்திரிகைகள் அழைத்துச் செல்லவேண்டும். ஆனால், இன்று பலபத்திரிகைகளில் ஜோஸ்யப்பகுதியும், ராசி பலனும் வெளியிட்டு மக்களை மேலும் மௌடீகப் பாதைக்கே இழுத்துச் செல்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் மாற வேண்டும் — மாற்றப்படவேண்டும்—மாற்றபட்டாகவேண்டும்.

திராவிடநாடு தனிநாடாகப் பிரிய அனைவரும் பாடுபட்டு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்

சென்னையில் திருவள்ளுவர் வாரக் கொண்டாட்ட விவரமும் வேண்டுகோளும்

குறள் நெறிக்கழக அறிக்கையின்படி, ஜுலை 24 முதல், 31 முடிய சென்னையின் பல பகுதிகளிலும்—வள்ளுவர் விழா நடத்த சில கழகங்கள் முன்வந்துள்ளன 24 சனி அன்று மயிலை திருவள்ளுவர் சழகம் 27 செவ்வாய்அமைந்தக்கரை—அறிவியக்கக் கழகமும் 31 சனி பெரம்பூர் வள்ளுவர்,மறைமலை, திரு வி க மன்றங்களும் விழா நடத்த முன் வந்துள்ளன

மற்ற பேட்டைகளிலும் தவறாது கொண்டாட வேண்டுகிறேன் விழா நடத்த முன்வருவோர் மற்ற நாட்களில் எந்த நாட்களில் நடத்துவது என்பதை குறள் நெறிக்கழகத் தலைவர் க அன்பழகன் எம் ஏ அவர்களுடன் (10. வேளாளர் தெரு, புரசை, சென்னை-7. என்னும் முகவரியில்) கலந்து, உறுதி செய்வதுடன் எல்லா மன்றத்தாரும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொருவராக வார முற்றும் விழா சிறக்கும்படி ஒத்துழைக்க வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
ஓ. பா. சரவணவேலு.
செயலாளர்

திருவள்ளுவர் திருநாள்

கொண்டாட வேண்டுகோள் !

கழகத் தலைவர் க. அன்பழகன் எம். ஏ. அறிக்கை

வேதகோஷ், தேவாரப் பாராயணம், திருப்பல்லாண்டு முழக்கம், பாகவத விளக்கம், கதா காலட்சேபம் ஆகியவையே தெருவெல்லாம் ஊரெல்லாம் பரவியுள்ள இக்காலத்தில, மக்களின் மதியிலே தெளிவேற்படுத்தவும் புது வாழ்வுக்கேற்ற புத்துணர்ச்சி ஊட்டவும் திருவள்ளுவரை நாடெங்கும் நடமாடச் செய்ய வேண்டியது நமது கடமையாதுப். ஆ—ர்

தமிழ்ப் பெருங்குடி மக்களே !

தமிழ் இனத்தவரின் தனிப்பெரும் வழி காட்டியும் தன்னிகரற்ற பெரும் புலவருமான திருவள்ளுவப் பெருந்தகையின் சீரிய கொள்கைகளும் சிறந்த கருத்துகளுமே சீரழிந்து கிடக்கும் தமிழ்ச் சமூகத்தைத் தலை நிமிர்ந்து வாழச் செய்ய வல்ல மாமருந்து என்பதை அறிவுடையோர் அனைவரும் ஒப்புகின்றனர். அத்தகு பெரு நெறி பரவ நமது முயற்சி என்ன ?

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ, மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி" என்றார், மனோன்மணீயம் வழங்கியபேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள். சாதி தொலைய சமயப் பகை ஒழிய கொள்கை உயர, அன்பு தழைக்க, அறம் ஓங்க பண்பு வளர—திருக்குறள் நீர் மக்கள் உள்ளங்களி லெல்லாம் பாய்ச்சப்பட்டாக வேண்டும்.

"வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்த வான் புகழ் கொண்ட தமிழ் நாடு—நம்நாடு" புகழ் கொண்டால் மட்டும் போதுமா ? அதுவும் பழம் புகழானல் பயன் குறையத்தானே செய்யும் ? எனவே பழம்புகழ் புதுவாழ்வு அளிக்கும்படி செய்ய வள்ளுவர் வகுத்த வழி நடக்க வேண்டும். நாட்டு மக்களையும் ஊக்கத்தோடு அவ்வழி நடக்கச் செய்ய வேண்டும்,

அதற்கான முயற்சியே 'திருவள்ளுவர் திருநாள்' கொண்டாடுதலாகும்.

திருவள்ளுவர் திருநாளையோ பல்வேறு குழுவினர் வெவ்வேறு நாட்களில் கொண்டாடி வருகின்றனர். சமயச்சார்புடையார் சிலர் வள்ளுவர் தோற்றம் மாசி உத்தரம் எனவும் வள்ளுவர் மறைவு வைகாசி அனுடம் எனவும் கொண்டு அவற்றுள் ஒன்றைக் கொண்டாடி வருகின்றனா.

பேரறிஞர் மறைமலையடிகளார், "கிருத்துவின் காலத்திற்கு முப்பது ஆண்டுகள் முந்தியவர் திருவள்ளுவர்" என்று அறிவித்த கருத்தைத் தழுவி வள்ளுவர் ஆண்டைக் கணக்கிட, தைத்திங்கள் துவக்கத்தையே வள்ளுவர் ஆண்டுத் துவக்கமாகவும் மேற்கொண்டு, பொங்கலோடு இணைத்தே வள்ளுவர் நாளையும் கொண்டாடுவாராயினர். மற்றும் பலர் வாய்ப்பு நேர்ந்தபொழுது விழாநடாத்துவராயினர். மறந்தோரும், வாய்ப்பற்றோரும் கடமையைக் கைவிட்டனர்.

இந்நிலையில் அனைவருக்கும் ஏற்புடையதான ஒருநாளை விழா நாளாகக் கொள்வோமானல், அந்நாள், நமது தாயகத்தின் தனிப்பெருந் திருநாளாக மலரும் என்பது திண்ணம்.

திருவள்ளுவரின் காலமே இன்னும் உறுதி எய்தவில்லை. தமிழ்ப் பேராசிரியருள்ளும்அவரதுகாலம் குறித்துக் கருத்து வேறுபாடுகள் உள்ளன என்றாலும், மறைமலையடிகளாரின் கருத்தே, பெரும்பாலோராலும் ஏற்கப்படுவதாக உள்ள நிலையில், வள்ளுவரின் காலத்தைப் பற்றி அனைவராலும் ஒப்புக்கொள்ளத் தக்கதான புதியதொரு முடிவு நிகழும் வரையில், மறைமலையடிகளாரின் கருத்தின்படி வள்ளுவர்ஆண்டுக் கணக்கைமேற்கொள்வதேசெயற்பாலதாகும்.

மேலும் வடவரின் ஆண்டுக் கணக்கை (பிரபவ விபவ வருஷப் பெயர் வரிசை) ஏற்ற 60-ஆண்டு சுழலில் சிக்கி, காலக்கணக்கை அறுதியிட்டுக் காணமுடியாது அல்லற்பட்டுவரும் தமிழர் தமது பழம் பெருமைக்கு ஏற்பவேனும் தனியானதொரு ஆண்டுக்கணக்கை மேற்கொள்வது இன்றியமையாததாகும். மதத்தலைவர், பேரரசர் பெயர்களால் பல்வேறு ஆண்டுக் கணக்குகள் நிலவுவதை அறிவோம் நாம். நமக்கென்று ஒரு காலக்கணக்கு இல்லாமலிருந்திருக்க முடியாது. எனினும் எவ்வாறோ இழந்துள்ளோம். குருடனைப்போன்று, இடர்ப்படுகின்றோம் இழந்ததைமீட்க நமது வழிகாட்டியான வள்ளுவரின் காலத்தினை ஒட்டி ஆண்டுக் கணக்கிடுவதே வழியாகும். 15—7—54 ஆகிய இன்றே திருவள்ளுவர் ஆண்டு 1985 ஆனித் திங்கள் 31-ம் நாளாகும்.

ஆனல் வள்ளுவரின் தோற்ற நாளோ, மறைவு நாளோ உறுதி செய்ய இயலாதனவாம் அந்நாட்களே. மாசி உத்திரமும், வைகாசி அனுடமும் என்று கூறுவது - மதநம்பிக்கையுடையார்க்கே ஏற்புடையதாகும். மேலும், அவற்றுள் எதுவும் இன்று பெருவழக்காகவும் இடம்பெற்றிருக்கவில்லை. அருகி வழங்கும் நிலையிலுள்ளதை மதநம்பிக்கைத்துணை கொண்டு வலியுறுத்துவதும் இக்காலத்தில் பயன் விளைவிக்காது.

மற்றும் மாசி உத்தரம், மார்ச்சு மாதத்திலும் வைகாசி அனுடம் மேமாதத்திலும் வருவதால், இவ்விழாவைக் கொண்டாடுவதில் மிகுந்த ஊக்கமும். உற்சாகமும், காட்டக்கூடிய கல்லூரி, உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், மார்ச்சு இறுதியில் தேர்வு நிகழ்வதாலும், மேமாதம் விடுமுறை காலமாவதாலும்,இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாட இயலாதவர்களாகிறார்கள்.

தைத்திருநாளையே- வள்ளுவர் நாளாகவும் கொள்ளலாம் என்றாலோ, தைப்பொங்கலோடு முன்னும் பின்னும், அதை ஒட்டிய விழாக்கள் நிகழ்வதும், அவ்விழா ஒவ்வொரு குடும்பத்திலும் தனித்தனி கொண்டாடப் படுவதாக அமைவதும், பொது மக்களைத் திரட்டி, அறிவுரைகள் வழங்கத்தக்க ஒரு ஒரு பெரு விழாவிற்கு ஏற்றசூழ்நிலையாக அமையவில்லை. மேலும் பொங்கலுடன் ஆண்டுத்துவக்கம் நிகழ்வதால், முத்தமிழ்விழா "தமிழா திருநாள்" முதலான விழாக்களும் அத்துடன் இணைத்துக் கொண்டாடப்படுகின்றன அவற்றுடன் வள்ளுவர் விழாவையும் இணைப்பது, அதை முழுப்பொலிவுடன் கொண்டாடவோ, பயன் மிகும்படி நடத்தவோ வாய்ப்பளிக்காது.

தமிழ் மக்களோ, பல்வேறு பொருளற்ற பண்டிகைகளிலே ஈடுபட்டிருந்த நிலையினின்றும் இப்பொழுதுதான் விடுபட்டு வருகின்றனர். அவர்களது உள்ளம் களிக்கும்படி, உவகைக்கு வழிசெய்வதாகப் பொங்கல் ஒன்றுதான் திருநாளாகஉள்ளது மற்றொரு திருநாள் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற அடிப்படையில் மக்களை இணைந்து நிற்கத் தூண்டும் 'விழா'வாக அமையுமானல் அது வரவேற்கப்பட வேண்டியதாகும் திருவள்ளுவர் திருநாள்—பொங்கல் நாளைப் போலவே—தமிழர் தேசியத் திருநாளாக—மக்கள் விழா நாளாக அமையும் தகுதி சான்றதாகும்.

எனவே—தைத் திருநாள் நிகழ்ந்து ஆறு திங்கட் கெல்லாம்—ஆண்டுத் துவக்கத்தில், ஒன்று ஆண்டு நடுவில் மற்றொன்று என்ற முறையில்-திருவள்ளுவர் திருநாள் கொண்டாடுவது மிகவும் பொருத்தமாகும். அதன்படியே—ஆடிப் பதினெட்டாம் நாளை ஒட்டி, ஜூலை இறுதி வாரத்தில்—ஒரு நாளை வள்ளுவர் நாளாகக் கொண்டாட வேண்டுமென்று குறள் நெறிக் கழகத்தில் முன்னரே தீர்மானிக்கப்பட்டுள்ளது, அண்மையில் 11-7-54 அன்று அண்ணுமலை நகரில் கூடிய சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டிலும் ஜூலை இறுதி வாரத்தில் ஒரு நாளைச் சென்னை அரசியலார், திருவள்ளுவர் திருநாளாகக் குறித்துப் பொது விடுமுறை அளிக்க வேண்டுமென்று ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட்டிருப்பது, வள்ளுவர் வாரத்திற்கு—ஆதரவு அளிப்பதாகும். தமிழ் மக்கள் ஏற்று செயல் புரிவது கடமையாகும்.

தமிழகம் வள்ளுவர் நாளை திருவள்ளுவர் கிழமையாகவே (ஒருவாரம்) கொண்டாடலாம் என்றெண்ணியே ஆடி 10 முதல் 16 முடிய (25—7—54 முதல் 31 வரை) ஏழு நாட்களையும் - வள்ளுவர் வாரம் என்று குறித்துள்ளோம். விழாவினை விரிவாக நடத்த விழைவாரும், அந்நாட்களிலே இயலாதாரும் அதன்பின் சில நாட்கள் தொடர்ந்தும் நடத்தலாம்.பலபகுதிகளிலும் பேரூர்களில்பலநாட்கள்தொடர்ந்தும்சிற்றூர்களில் ஓரிரு நாட்களிலும் விழாக் கொண்டாடலாம்.

கல்லூரிகளிலும், பள்ளிகளிலும்' தமிழ்க்கழகங்களிலும் கலைமன்றங்களிலும், கட்சி அமைப்புக்களாலும், பொது நிலையங்களாலும், திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட வேண்டும்.

மீசை அரும்பும் இளையர்முதல் நரை மேலிட்ட முதியர் வரை, ஆடவரும், பெண்டிரும், ஆசிரியரும் மாணவரும், வணிகரும் தொழிலாளரும் பல்வேறு நிலையினரும், நான்கு பேர் ஒன்று கூடும் அவை எதுவாயினும். பட்டி மன்றமுதல், பாராளும் மன்றம் வரை, உட்ற பயிற்சிக் கூடம் முதல் ஊராட்சி மன்றம் வரை, இசையரங்காயினும், நாடகப் பேரவையாயினும் ஒவ்வோரிடத்திலும்-வள்ளுவர் விழா நிகழ வேண்டும்.

குடிசையிலும்,மாளிகையிலும் திண்ணையிலும், தெருவிலும், பட்டி தொட்டிகளிலும், நாடு நகரங்களிலும், வள்ளுவர் விழா பொங்கலைப் போன்று—பொங்கிப் பூரிக்க வேண்டும்.

கொடியுயர்த்தல், தோரணங் கட்டல், அலங்கரித்தல், புத்தாடை உடுத்தல் ஊர்வலம் வருதல், விழாக் கூட்டம் நடத்தல் முதலிய பலவும்விழாநாளில் மேற்கொள்ள வேண்டும்.

குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்தல், ஏழைகளின் பசி களைதல், உழவருக்குத் தொண்டாற்றல் முதலிய சமூகப் பணிகளும் விரும்பத்தக்கன.

உலகோர் உயர்வதற்கான,நல் வாழ்வின் அடிப்படையான குறள் நெறியை அறமுறையை, அன்பு வழியை, அருட்சிறப்பை இன்பத்தின் இலக்கணத்தை, ஒழுக்கத்தின் உயர்வை, வாய்மையின் பெருமையை, அறிவின் நலத்தை நாட்டோருக்கு எடுத்துரைத்தற்குரிய நன்னுளே அம்நாள். மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் கலை ஆர்வமும். கடைப் உணர்ச்சியும் விடுதலை வேட்கையும் சமத்துவ இலட்சியமும் பூத்திடச் செய்தற்கான பொன்னுளே அந்நாள் !

திருவள்ளுவரின் கருத்துக்கள் கைவிடப்பட்ட காரணத்தை குறள் நெறி குலைய நேர்ந்ததை விளக்குவதோடு, திருக்குறள் ஆட்சியை நிலை நாட்டத் துணையாம், திருநாளே அந்நாள்திருக்குறளைப் பரப்பவும் திருப்பணியை வகுப்புகள் நடத்தும் முயற்சியை இந்நாளில் ஊக்குவித்திடுவதும் பெரும் பயனுகும்.

விழாவினை மேற்கொள்பவர்கள், ஆண்டுதோறும் விழா எடுக்கவும்உறுதிகொள்ளவேண்டும்.

விழாவில் வள்ளுவா வாரத்தில் ஒரு நாளை விடுமுறையாக அளிக்கவேண்டுமெனவும், நீதி மன்றங்களிலும், சட்டசபைகளிலும், திருக்குறள் ஏட்டைக் கையிற்கொண்டு உறுதிமொழி எடுத்துக்கொள்வதே முறை என்று, சட்டம் இயற்றவேண்டுமெனவும். அரசியலாரை வற்புறுத்தியும், செய்தித்தாள்களும் கிழமை ஏடுகளும், பொதுமக்களும், வள்ளுவர் ஆண்டுக்கணக்கையே, வழக்காற்றில் கொள்ள வேண்டுமென, கேட்டுக்கொண்டும், தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

விழா நிகழ்ச்சி விவரங்களை—இயன்றவரை — எல்லா ஏடுகளுக்கும், அவற்றிற்கு ஏற்ற அளவிலும். முறையிலும், அனுப்பவும் வேண்டும்.

பொங்கல் விழாவை ஒத்ததாக வள்ளுவர் நாள் நாடெங்கும் கொண்டாடப்படும் நிலையினை விரைவில் தோற்றுவிக்க வேண்டுகின்றோம்!

4-ம் பக்கம் பார்க்க

அமெரிக்காவுக்கு இந்தியப் புலிக்குட்டி

நியூயார்க், ஜூலை. 16—

கான்பூரைச் சேர்ந்த விஜய சிவதஸா என்ற ஐந்து வயது சிறுவன் நியூயார்க்கிலுள்ள சென்ட்ரல் மிருகக் கண்காட்சி சாலைக்கும் அங்குள்ள குழந்தைகளுக்குமாக எட்டு மாத பிராயமடைந்த புலிக்குட்டியொன்றை அன்பளிப்பாக அனுப்பியிருக்கிறான்.

ஐ. நா. வில் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியான ரஜேஷ்வர் தயாள் என்பவர் இப்பையனின் மாமா. இரண்டு ஆண்டுகளுக்குமுன் இப்பையன் அமெரிக்காவுக்கு வந்திருந்தான்.

இப்புலிக்குட்டி கடந்த டிசம்பர் மாதத்தில் மத்திய இந்தியாவில் தயாள் மலையேறும்போது பிடிபட்டது. நார்வார் என்ற இடத்துக்கருகே இதன் தாயார் சில கன்று காலிகளை அழித்து விட்டுச் சென்ற போது இக்குட்டி அகப்பட்டது.

விஜய சிவத்ஸாவின் வீட்டில் இக்குட்டி வளர்ந்து வந்தது. இதற்கு விஜய் என்று பெயர்.

நாடிப்பார்க்க புதுக்கருவி

உறிக்ஸ்வில்லி, ஜூலை, 16—

ரணசிகிச்சை அளிக்கும் போதும் தேவையான மற்ற வேலைகளிலும் நோயாளியின் இருதயத்துடிப்பைத் தெரிந்து கொள்ள பயன்படும் புது மின்சாரக் கருவியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. சிறு ரேடியோ போன்று காட்சியளிக்கும் "பால்பாட்ரான்" என்ற இப்புதுக் கருவி அதனுள் பொருத்தப்பட்டுள்ள பாட்டரியின் உதவியால் இயங்குகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கருவியை நோயாளியின் உடம்புடன் இணைத்தால் இருதயத் துடிப்பு எவ்வாறு இருக்கின்றது என்பதை இக்கருவியைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

மீன் பிடிப்போர் வாலிபர் சங்கம்

காசிமேடு மீன் பிடிப்போர் வாலிபர் சங்கத்திலிருந்து சங்க சட்டதிட்டத்திற்கு மீறி முரண்பாடாக நடந்ததினால் சங்க உபதலைவர், ஈ. ஆறுமுகம் சங்கக் காரியதரிசி விராஜி ஆக இருவரையும். 8 7 54ல் நடந்த நிர்வாகக் கூட்டத்தில் விலக்க தீர்மானிக்கப்பட்டது என்று சங்கத் தலைவர் எம் மாயகிருஷ்ணன் அறிவிக்கிறார்.

திருமணம்

லால்பேட்டை மீன் பிடிப்போர் தெருவிலுள்ள சதாசிவம் இல்லத்தில் 14-7-54 காலை 8 மணிக்கு தோழர் கு. தி. சு. நடராஜர் தலைமையில் தோழியர் செயலட்சுமிக்கும் தோழர் வேலமுகனுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. இராமசாமி ஆகியவர்கள் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள்.

திருவள்ளுவர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுமலர்ச்சி உள்ளங்கொண்ட அனைவரும் வள்ளுவர் வழிவந்த எல்லோரும் கடமையாற்ற வேண்டுகிறோம். வள்ளுவர்வாரம் திருவள்ளுவர் திருநாள் ஜூலை 25 முதல் 31 வரை, ஒல்லும் வகையெல்லாம் விழா வினைப் போற்றவேண்டுகிறோம்!

"செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க செய்யாமை யானும் கெடும்" —என்பது வள்ளுவர் வாய்மொழி வாய்மொழியைமறவாதீர்! செயலாற்றத் தவறாதீர்!

வளர்க வள்ளுவர் புகழ்!

வெல்க குறள் நெறி!!

சென்னைத் தமிழாசிரியர் கழகம்

சென்னை, ஜூலை. 15—

சென்னைத்தமிழாசிரியர் கழகத் தலைவர் திரு. மயிலைசிவமுத்து பின்வருமாறு எழுதுகிறார்:

"தில்லையில் அண்மையில் நடைபெற்ற சென்னை மநிலத் தமிழாசிரியர் கழக மாநாட்டு நடவடிக்கைகளை விளக்குவதற்காகவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழாசிரியர் கழகத்தை வலுப்படுத்தி மாநிலத் தமிழாசிரியர் கழக அமைப்புக்குரிய உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்து மாநிலத் தமிழாசிரியர் கழகத்தை அமைக்க வேண்டிய பொறுப்பு நம் சென்னைத் தமிழாசிரியர் கழகத்துக்கு அம்மாநாட்டில் அளிக்கப்பட்டிருப்பதால் அதனை ஆய்ந்து முடிவு செய்வதற்கும், நம் சென்னைத் தமிழாசிரியர் கழகத்தைப் புதுப்பித்துச் சீரிய முறையில் செயற்படச் செய்வதற்குமாக 18-7-54 ஞாயிறு மாலை 4 மணிக்குச் சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் சென்னைத் தமிழாசிரியர் கழக உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வந்திருந்து எதிர்கால ஆக்கப் பணிகளுக்கான அறிவுரைகளை வழங்குவதுடன் அனைவருடைய கட்டுப்பாடான ஒருமித்த உணர்வை அனைவரும் உணர்ந்து கொள்ள ஆவன செய்யுமாறும் வேண்டுகின்றோம்.

லால்பேட்டை தி. மு. கழகம்

லால்பேட்டை, ஜூலை. 16—

15 7 '54 வியாழன் இரவு எட்டு மணிக்குகடைவீதியிலுள்ளகழகக்கட்டிடத்தில் தோழர் வே. சின்னத்தம்பி தலைமையில் போராட்ட வெற்றிவிழாவும், மஜீத் படிப்பகத் துவக்கவிழாவும் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் கே. கோவிந்தராசு, மு. இராமசாமி ஆகியோர் போராட்டத்தின் வரலாற்றை விளக்கியும், படிப்பகத்தின் அவசியத்தைப் பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

மஜீத் படிப்பகத்திற்கு தோழர் எம் எஸ் சுல்தான் செயலாளராகவும் தோழர் எல் ஈ கோவிந்தசாமி துணைச் செயலாளராகவும், தோழர் வே சின்னத்தம்பி பொருளாளராகவும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் தி மு க செயலாளர் தோழர் லா. ந. இராமலிங்கம் அனைவருக்கும் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது

புதிய செயலாளர்

சென்னை 10-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளராக தோழர் வி. சி. தமிழ்தாசன் அவர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

முரசொலி

தோழர் மு. கருணாநிதியை ஆசிரியராகக் கொண்ட "முரசொலி"யின் மும்முனைப்போர் நினைவு இதழ் பார்வைக்கு அழகாகவும் பருகுவதற்குத் தேவையும் அமைந்துள்ளது. அறிஞர் அண்ணாவின் "சேரன் செங்குட்டுவன் தீட்டும் சிலப்பதிகாரம்" என்ற எழுக்கோவியமும், கழக எழுத்தாளர்களின கட்டுரைகளும இதழை, சிந்தனைகளஞ்சியமாக்கிவிட்டிருக்கிறது.

நண்பர் கருணாநிதி தீட்டியுள்ள "சுகம் எங்கே?" ஓர் சோகச் சித்திரம்! ஏமாற்றத்தின் எதிரொலி! காவியச் சோலையிலே கள்ளர் — ஆமாம் எழுத்துத் திருடர் — இன்று பலர் நுழைந்து விட்டுள்ளனர். அந்தக்கள்ளர் கூட்டத்திற்குக் கசையடி தரவில்லை கருணாநிதி, அவர்களைக் கண்டு இரத்தக கண்ணீர் கொட்டுகிறார் "சுகம்! எங்கே?" பார்க்கையிலேயே உள்ளம் பதறி விடுகிறது, இல்லையா என்பதை நீங்களே படித்துவிட்டுச் சொல்லுங்கள்!

—ஆசிரியர்

உசிலம்பட்டி - போடி ரயில் பாதை

ஜூலை 20-ந் தேதி ஆரம்பம்

உசிலம்பட்டி ஜூலை, 16—

உசிலம்பட்டி—போடி ரயில் பாதையின் இணைப்பு வேலைகள் ஜூன் 15-ந் தேதியுடன் முடிவடைந்ததும், ஜூலை, 2-ந் தேதி, எஞ்சினீயரிங் அதிகாரிகள் பார்வையிட்டு ரயில் போக்குவரத்துக்குத் திருப்திகரமாய் இருப்பதாக சம்மதம் தெரிவித்திருந்தனர். இப் புதுப் பாதையில், ஜூலை 20 முதல் ரயில் ஓடும் என்று அதிகார பூர்வமான செய்தி கிடைத்துள்ளது.

ஸ்டாலின் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி

ரஷ்யாவில் பாராட்டு

மாஸ்கோ. ஜூலை. 17—

உலக நாடுகளிடையே சமாதானத்தை உறுதிப் படுத்த சேவை செய்ததைப் பாராட்டி இந்திய விஞ்ஞானி தோழர் ஸாஹிப்ஸிங்ஸோகேக்கு ரஷ்யா ஸ்டாலின் பரிசு வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. இதைப் பாராட்டி ரஷ்யாவிலுள்ள இந்திய தூதர் ஓர் விருந்து நடத்தினாராம். அதில் ரஷிய மந்திரிகள் கவுன்சிலின் உப தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டனராம்,

திருமதி, எம். ராயம் அவர்களுக்குச் சொந்தமான மெர்கண்டைல் அச்சகத்தில் திரு. டி. வி. சுப்பிரமணியம் அவர்களால் அச்சிடப்பட்டு 2-45 முத்து மாரிச்செட்டித்தெரு, சென்னையில் வெளியிடப்பட்டது

சென்னை சினிமாக்கள்

தமிழ்

ஸ்ரீ கிருஷ்ணா	பெண்
உமா	பெண்
ராஜகுமாரி	பெண்
வெலிங்டன்	பெண்
லட்சுமி (பெரம்பூர்)	பெண்
காசினோ	சொர்க்கவாசல்
வீனஸ்	சொர்க்கவாசல்
பிரபாத்	சொர்க்கவாசல்
பிராட்வே	மாங்கல்யம்
சித்ரா	மாங்கல்யம்
சரஸ்வதி	மாங்கல்யம்
காமதேனு	மாங்கல்யம்
சன்தியேட்டர்	பராசக்தி

இந்தி

அசோக்	ஷபாப்
ஸ்டார்	டாக்சிடிரைவர்
கபாலி	சனம்

ஆங்கிலம்

ஓடியன்	*The Glenn Miller Story*
நியூ குளோப்	*King of the Khyber Rifles*
நியூஎல்பின்ஸ்டன	*Miss Sadie Thompson*
பிளாசா	*Because of Eve*
ராக்சி	*I Confess*
ரீகல்	*Thunder over the plains*
கெயிட்டி	*Mosked Marvel*

தெலுங்கு

கிரவுன்	சின்னம்மாகதா

நாடகம்

ஒற்றைவாடை	ரத்தக்கண்ணீர்

சொற் பயிற்சிக் கூட்டம்

சென்னை; 18-7-54 ஞாயிறு காலை 10 மணிக்கு நெ. 17 சாலை விநாயகர் கோயில் தெரு முத்தியாலுப்பேட்டை முத்தமிழ் மன்றத்தில் தோழர் ச. பா. உத்தமன் அவர்கள் தலைமையில் போராட்டம் என்ற பொருள் பற்றி சொற் பயிற்சி கூட்டம் நடைபெறும்.

மாலைமணி

சந்தா விபரம்

*

சென்னைக்கு:—

ஆண்டு சந்தா	12-0-0
அரையாண்டு	6-0-0
3 மாதங்களுக்கு	3-0-0

வெளியூர்கட்கு (இலங்கைஉட்பட)

ஆண்டுசந்தா	15-0-0
அரையாண்டு	7-8-000
3 மாதங்களுக்கு	3-12-0

வெளிநாடுகட்கு:—

ஆண்டு ஒன்றுக்கு	20-0-0
அரையாண்டு	10-0-0
3 மாதங்களுக்கு	5-0.0

மூன்றுமாதங்கட்குக் குறைந்த சந்தா ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

விளம்பர விகிதம்

1 பத்தி 1 அங்குலம் ரூ. 5-00

ஒப்பந்த விளம்பரம்

1 பத்தி 1 அங்குலம் ரூ. 4.0.0

நீடித்த விளம்பரங்களுக்குச் சலுகை உண்டு.